**தேசிய கடதாசி கம்பனி லிமிட்டட் - 2015/2016**

-----------------------------------------------------------------------------------

தேசிய கடதாசி கம்பனி லிமிட்டடின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புக்களுடன் கூடிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கம் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வழங்குவதற்கான அடிப்படையொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதிய மற்றும் பொருத்தமான அளவு கணக்காய்வுச் சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 58 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக இனங்காணப்பட அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் மொத்தப் பெறுமதி ரூபா 132,274,693 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் கிரயம் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ. மீளாய்வாண்டில் நிலையான வைப்புத்தொகை நிலுவைகள் எதுவும் இல்லை என மக்கள் வங்கி உறுதிப்படுத்தியிருந்த போதிலும், நீண்ட கால முதலீடுகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் நீண்ட கால வைப்புக்களின் கீழ் மக்கள் வங்கியில் எதிர்மறை நிலையான வைப்புத்தொகையாக ரூபா 2,734,584 இனங்காணப்பட்டிருந்தது.

ஆ. மீளாய்வாண்டில் உற்பத்தி செயன்முறைகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை கம்பனி உறுதி செய்திருந்தாலும், மொத்தப் பெறுமதி ரூபா 14,460,469 உற்பத்திச் செலவாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்தது.

இ. நிதிக்கூற்றுக்களின பிரகாரம் மீளாய்வாண்டில் மார்ச் 31 இல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரிப் பொறுப்பு ரூபா 45,549,485 ஆக இருந்ததுடன் அந்தத் திணைக்களத்தின் நேரடி உறுதிப்படுத்தலின் பிரகாரம் இது ரூபா 132,302,377 ஆக இருந்தது. வித்தியாசம் ரூபா 86,752,892 தொடர்பாக ஒப்பிட்டு அல்லது வேறுவிதத்தில் உறுதிப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ. பிரதான வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 6,074,415 ஐ உறுதிப்படுத்துவதற்குத் தேவையான விற்பனை விலைப்பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டுகள் மற்றும் கொள்முதல் கிரயமான ரூபா 3,577,369 ஐ உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்முதல் விலைப்பட்டியல் என்பன இருக்கவில்லை.

ஆ. ரூபா 128,150,572 பெறுமதி திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மானியங்கள், ரூபா 34,260,504 ஆன அமைச்சிலிருந்து பெறப்பட்ட மானியங்கள் மற்றும் ரூபா 94,442,882 ஆன தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட மானியங்கள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பற்றுச்சீட்டுகள் மற்றும் மானியங்கள் பெறுவனவிற்கான மூலாதார ஆவணங்கள் இருக்கவில்லை.

இ. ரூபா 54,475,280, ஆன ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு மற்றும் மிகைக்கட்டணம் , ரூபா 3,642,525 ஆன ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சம்பள பதிவேடு, பணம் அனுப்பும் சீட்டுகள் மற்றும் பங்களிப்பு கணிப்பீட்டு ஆவணம் எதுவும் இருக்கவில்லை.

ஈ. ரூபா 11,082,941 ஆன அட்டுறு வாடகை மற்றும் ரூபா 26,281,819 ஆன அட்டுறு சம்பளம் மற்றும் ஊதியம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான குத்தகை ஒப்பந்தங்கள் மற்றும் மாதாந்த சம்பளப் பதிவேடு இருக்கவில்லை.

உ. ரூபா 146,388,237 ஆன வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ரூபா 27,566,297 ஆன பல்வேறு கடன்பட்டோர் (அஸ்கான் கடதாசி) ஆகியவற்றை உறுதிப்படுத்த தேவையான கட்டுப்பாட்டு கணக்குகள், கடன்பட்டோர் பேரேடுகள் மற்றும் நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் எதுவும் இருக்கவில்லை.

ஊ. ரூபா 839,300,644 ஆன ஆதனம் பொறி உபகரணங்களை உறுதிப்படுத்த தேவையான நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துகள் பதிவேடு, சொத்து உறுதிப்பத்திரங்கள், மோட்டார் வாகன பதிவு சான்றிதழ்கள் எதுவும் இருக்கவில்லை.

எ. ரூபா 121,481,914 ஆன இறுதி இருப்புக்களை உறுதிப்படுத்த தேவையான இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் இருப்புப் பதிவேடுகள் எதுவும் இருக்கவில்லை.

ஏ. ரூபா 389,715,930 ஆன வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவற்றை உறுதிப்படுத்த தேவையான நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் கட்டுப்பாட்டு கணக்குகள் எதுவும் இருக்கவில்லை.

ஐ. ரூபா 231,282,413 ஆன இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மிகைக் கட்டணங்களுக்கான ஒதுக்கத்தினை உறுதிப்படுத்த தேவையான மிகைக் கட்டண அறவீட்டுக் கட்டளை மற்றும்இலங்கை மின்சார சபையுடன் பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்கள் இருக்கவில்லை.

ஒ. ரூபா 467,972,042 ஆன ஓஸ் லங்கா (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை உறுதிப்படுத்த தேவையான குத்தகை ஒப்பந்தம், தொடர்புடைய நாளேட்டுக் குறிப்புகள், வரிசை அமைச்சு மற்றும் நிதி அமைச்சு டன் பரிமாற்றம் செய்யப்பட்ட கடிதங்கள் எதுவும் இருக்கவில்லை.

ஓ. ரூபா 161,119,057 ஆன வட்டியுடன் கூடிய கடன்கள் தொடர்பான கடன் ஒப்பந்தங்கள் மற்றும் கடன் தொகை பெறப்பட்டமை தொடர்பான கடிதங்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் எதுவும் இருக்கவில்லை.

ஔ. ரூபா 20,078,680 பெறுமதிக்கான பணிக்கொடை வாடிக்கையாளர் வைப்புப் பதிவேடு இருக்கவில்லை.

க. ரூபா 14,487,197 ஆன பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை , உறுதிப்படுத்த தேவையான காசேடு , வங்கி இணக்கம் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் இருக்கவில்லை.

ச. ரூபா 19,387,340 பெறுமதிக்கான மாதாந்த சம்பளம் மற்றும் மிகையூதிய கணிப்பீடுகள் தொடர்பான பதிவேடு இருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 71,610,232 ஆன இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 123,638,759 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 195,248,991 ஆன முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்தது. இம்முன்னேற்றத்திற்கு விற்பனைக்கிரயம் ரூபா 226,432,821 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

2015 பெப்ரவரி 09 ஆம் திகதி இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 4,72,210,131 தொகை செலுத்தப்படாமையால் வாழைச்சேனை தொழிற்சாலைக்கான மின்சார விநியோகம் அன்றைய தினம் முதல் தற்காலிகமாக துண்டிக்கப்பட்டது. மின்சார விநியோகம் இல்லாத காரணத்தினால் அன்று முதல் வாழைச்சேனை தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தேசிய கடதாசி கம்பனி லிமிட்டடின் 2015/2016 கணக்காண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 2022 யூலை 20 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த அறிக்கை இவ்வறிக்கைத் திகதி வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.